RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s850

# கணையாழி இதழ் வழி பெண்ணிய ஆக்கங்கள்

சு. பானுமதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பருத்திப்பட்டு, ஆவடி, சென்னை-600071, தமிழ்நாடு, இந்தியா

# Feminist Development in Kaniyazhi Magazine

S. Banumathi [a, *]

[a] Department of Tamil, Mahalashmi Women's College of Arts and Science, Paruthippattu, Avadi, Chennai-600071, Tamil Nadu, India

* Corresponding Author: banusekar2003@gmail.com

Received: 05-04-2021
Revised: 04-06-2022
Accepted: 10-06-2022
Published: 09-08-2022

Check for updates

## ABSTRACT

In a society where men and women live together, equality for women is often not seen. The condition of women has been like this since time immemorial. While trying to investigate this, this research has been carried out on the topic of Feminist Development through Kaniyazhi magazine from 2000 to 2005. In this study, the origin of Kaniyazhi magazine, the purpose for which the magazine was started, the literary development of Kaniyazhi magazine etc. are mentioned. About feminism rhetoric, the way feminism developed in western countries, the way women's rights were said in Kaniyazhi's works, how women's paintings have been depicted in artworks over time, and how women's paintings express feminist ideas by feminists today have been investigated in Kaniyazhi magazine. Regarding the status of women in society, the importance given to female education, how the words for women are handled in the language in the society, and whether there are words with a unique identity have been investigated. In the conference of women writers held in Hyderabad, it was discussed how the thoughts and pride of women should be sown in the works of women writers. This article examines the manner in which the above feminist ideas have been dealt with in the creation of Kaniyazhi magazine.

**Keywords:** Kaniyazhi Magazine, Feminism, Female Education, Women Writers

## முன்னுரை

மனித சமூகத்தில் ஆணும் பெண்ணும் இணைந்து மானுடச் சமுதாயத்தை உருவாக்குகின்றனர். மானுடத்தின் உயர்ந்த பண்பு மனிதரை மனிதராக மதிக்கும் பண்பாகும். ஆனால் இன்று இந்நிலையில் பல மாறுபாடுகள் காணப்படுகின்றது. காலம் காலமாக சான்றோர் பலர் பெண்ணியச் சிந்தனைகளைத் தன் படைப்புகள் வழி முன்னெடுத்தாலும் இன்றும் சமநிலை அடையாத நிலையே காணப்படுகின்றது. பெண்ணியம் ஒரு சமுதாய இயக்கமாக மேலை நாடுகளில் தோன்றியது. பெண்ணுக்குரிய சமூக உரிமைகள் மறுக்கப்பட்டன பெண்ணியம். சமூக உரிமைகளைப் பெறவும், தனது இருப்பின் தன்மைகளைச் சமூகத்திற்கு உணர்த்தவும், தனது இருப்பை நிலைநாட்டிக் கொள்ளவும் ஒரு பேரியக்கமாகப் பெண்ணிய இயக்கம் உலகெங்கும் உருவானது. பெண்ணியம் என்பது உலகளாவியது. பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாகும். கணையாழி இதழ் பெண்ணியச் சிந்தனைகளையும், பெண்கள் முன்னேற்றம் அடைய ஆக்கபூர்வமான முடிவுகளையும் படைப்புகளின் வழி வெளிப்படுத்தி உள்ளது. இதனை வெளிப்படுத்தும் முகமாக கணையாழி இதழ் வழி பெண்ணிய ஆக்கங்கள்எனும் தலைப்பின் கீழ் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## கணையாழி இதழ்

1965ஆம் ஆண்டு ஜூலை மாதம் புதுதில்லியில் கி. கஸ்தூரிரங்கன் அவர்களால் கணையாழி இதழ் தொடங்கப்பட்டது. இதழ் தொடங்கப்பட்ட காலத்தில்பேரிதழ்களிலிருந்து சற்று மாறுபட்டு வந்தது உண்மை எனினும் இலக்கிய இதழ் என்ற நிலையில் இதழ் தொடங்கப்பட்டபோது இல்லை. காலம் மாற்றத்தினாலும் பல இலக்கிய ஆர்வலர்களின் முயற்சியினாலும் கணையாழி இதழ்படிப்படியாக வளர்ச்சி பெற்றது. பல்வகையான இலக்கிய விவாதங்களுக்கு இடமளித்தது. புதிய படைப்பாளிகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தது.'தில்லிப் பத்திரிக்கை'என்ற பட்டத்தைக் கொண்டு பத்திரிக்கையின் எல்லையைக் கட்டுப்படுத்த வேண்டாம் அதை பரவலாக்க வேண்டும் என்று அன்றைய எழுத்தாளர் சங்கத் தலைவர் சோமலே கேட்டுக்கொண்டதால் பின்னாளில் 1980களின் மத்தியில் சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது

கி. கஸ்தூரிரங்கன் கணையாழி குறித்து பேசுகையில் கணையாழியின் தலையங்கத்தில், "இது தில்லிப் பத்திரிக்கை ஆயிரம் மைல்கள் கடந்து வந்து இங்கு வாழ்ந்து வரும் தமிழர்களுக்காக அவர்கள் சுவைத்து மகிழக்கூடிய விஷயங்களைப் பிரசுரிக்கும் நோக்கத்துடன் ஆர்வமுள்ள சில நண்பர்களின் கூட்டு முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு இருக்கும் மாதப் பத்திரிக்கை. தேர்ந்தவர்களால் சுவைப்பட எழுதப்படும் செய்திக் கட்டுரைகள், கதைகள், இலக்கியம், விஞ்ஞானம், கல்வி மற்றும் வாழ்க்கைக்குப் பயன் தரும்பல சுவையான குறிப்புகள் இவற்றைத் தாங்கி ஒவ்வொரு தமிழ்மாத முதல்வாரத்தில் உங்களைத் தேடி வரும்" எனும் அறிவிப்பு கணையாழி இதழின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது (Sundaramoorthy, 2004).

கணையாழியின் தொடக்கம் தில்லியின் அப்போதிருந்த தமிழ் இலக்கிய ஆர்வலர்களை ஒன்றிணைத்தது. கருத்து வேறுபாடின்றி அனைவருக்கும் இடம் அளித்தது.

கணையாழியின் தொடக்க காலகட்டத்தில் உலக நாட்டு நடப்புகள் இலக்கியத் தொடர் கட்டுரைகள், அரசியல் பேட்டிகள், மரபுக்கவிதைகள் ஆகியன இடம்பெற்றன. அடுத்து வந்த காலகட்டங்களில் அரசியல் பெரும்பகுதி நீக்கப்பட்டு, கதை, கவிதை, கட்டுரை, குறும்புதினம், தலையங்கம் போன்ற தளங்களைக் கொண்டு இயங்கி வந்தது.

## பெண்ணியம்-சொல் விளக்கம்

பெண்ணியம் ஒரு சமுதாய இயக்கமாக மேலைநாடுகளில் தோன்றியது. பெண்ணியம் என்ற சொல்லுக்கு ஆக்ஸ்போர்டு அகராதி, "பெண்ணியம் என்ற சொல்லுக்குப் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது போராடுவது என்ற பொருளைத் தந்தது (Prema, 1998).

பெண்ணியத்தைவளர்த்தெடுத்தும், பெண்விடுதலை மையமாகக் கொண்டும், பல இயக்கங்கள் மேலை நாடுகளில் தோன்றியது. மேலை நாடுகளில் அவ்வாறு தோன்றிய பெண்ணிய இயக்கங்களைக் கருத்தில்கொண்டு பெண்ணியத்தை பல வகைகளில் வகைப்படுத்தினர். அவற்றை நாம் நான்கு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம் அவை மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism), மார்க்சியப் பெண்ணியம் (Marxist Feminism), தீவிரப் பெண்ணியம் (Redical Feminism), சமதருமப் பெண்ணியம் (Socialist Feminism)

## பெண்ணுரிமை

சமூகச் சீர்திருத்தவாதிகள் பலர் பெண்ணடிமைத்தனத்திற்கும், பெண் உரிமைக்காகவும் போராடியுள்ளனர். பெண்களுக்கான உரிமையைப் பெற்றுத்தருவதற்கு இன்றும் போராடி வருகின்றனர். பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்தவர்களில் மிக முக்கியமானவராகக் கருதப்படுபவர் பெரியார்ஆவார்.

"பெண்கள் சமூகத்திலும், அலுவல்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கபடுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளும்" (Muthuchithambaram, 1995).

சமுதாய நலனிற்கு தேவை என்பதையும் ச. முத்து சிதம்பரம் அவர்களின் இக்கருத்து பெண்ணுரிமையை மீட்டெடுப்பதில் மேலும் வலுசேர்க்கிறது. சமூகத்தில் ஓர் ஆணுக்கு உள்ள உரிமைகளும் வாய்ப்புகளும் பெண்ணுக்கும் உண்டு எனும் நிலை உருவாக வேண்டும். உடல் கூற்றின் வேறுபாடு சமத்துவத்திற்கு சமுதாயத்தில் தடையாக இருக்கக்கூடாது.

சமூகத்தில் ஆணுக்கு நிகராக பெண்ணிற்கு வாய்ப்பு வழங்கப்படுவதுகுறித்து முழக்கமிட்டாலும். சட்டங்கள் பல இயற்றப்பட்டாலும், பிறந்த வீட்டில் பெண்களுக்கு உரிமையும், அதிகாரமும் வழங்கப்படுவதில்லை. திருமணத்தின்போது சீர்வரிசைகளாகவே வழங்கப்படுகின்றன. பிறந்த வீட்டிலிருந்து சீர் வரிசைகளைப் பெற தகுதியுடையவர்களாகச் சமுதாயத்தில் பெண்களின் நிலை காணப்படுகிறது.

பணிக்கு செல்லும் பெண்களே பெரும்பாலும் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். பணிக்கு செல்லும் பெண் சம உரிமை கோரும்போது அவளுக்காகத் தனிப்பட்ட முறையில் புகுந்த வீட்டிலும், பிறந்த வீட்டிலும் அறிவுரைகள் பல வழங்கப்படுகிறது.

## பெண் ஓவியம்

பெண் ஓவியம் என்பது வரலாறு சார்ந்ததாக இல்லாமல் சமுதாயத்தில் பெண்ணின் நிலை என்ன என்பதை வெளிப்படுத்தும் விதமாக சமீப காலங்களில் பெண்கள் தனக்கும் தன் உடலுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்தும் விதமாக ஓவியங்கள் மற்றும் சிற்பங்களைப் படைக்கின்றனர்.

பெண் என்பவள் ஆணுக்காகப் படைக்கப்பட்ட ஒரு போகப் பொருள், அழகானவள், கவர்ச்சியானவள் என்பன போன்ற கற்பனையைத் தவிர்க்க வேண்டியே ஓவியம் மற்றும் சிற்பம் படைக்கின்றனர். பெண் சிந்தனையாளர்கள். பெண் என்பவள் ஆணின் பார்வையில் சித்தரிக்கப் பட தேவையில்லை என்று எண்ணுகிறார்கள். ஒரு பெண்ணுக்கு ஏற்படும் உடல், மன வலிகளைச் சொல்கிறார்கள் அவற்றைத் தன் படைப்புகள் வழி வெளிப்படுத்துகிறார்கள். கணையாழி இதழில் 2000ஆம் ஆண்டில் வெளிவந்த "க்ருஷாங்கினி-நாகராஜன்" இணைந்து எழுதிய நிகர் ஓவியம் என்னும் தொடர்கட்டுரையில் பெண் ஓவியர்கள் குறித்தும் அவர்களின் ஓவியப் படைப்புகள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

பெண்ணிய ஓவியர்களின் ஓவியங்கள் வழி பெண்ணிய சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. "ஸ்மித், ஒரு பெண்ணுக்கு ஏற்படும் வலிகளை அதற்கு அவள் தர வேண்டியுள்ள விலையை, அவள் உள்ளிருக்கும் உறுப்புகளைச் சிற்பமாக வடித்து அதன் மூலம் உணர்த்துகிறார். இதயம், கர்ப்பப்பை, சிறுநீரகம், இரைப்பை, முதுகுத்தண்டு, தோல் போன்றவற்றை தனித்தனியே சிற்பமாக்கி உள்ளார். காலம் காலமாக சமுதாயத்தில் பின்பற்றப்படும்' பரிசுத்தமான பெண்' என்பதற்கான கோட்பாடுகளை இவர் கேள்விக்குறி ஆக்குகிறார். எனவே சிறுநீர் பிரிதல் என்னும் செயலையும் இவர் சிற்பமாக்கியுள்ளார்.

பெண்ணின் உடல் வரலாறு, சமுதாய ரீதியாக எப்போதுமே ஆண் ஓவியர்களுக்கு கிளர்ச்சிக்கான கருப்பொருளாகவே இருந்து வருகிறது. இவர் தமது படைப்புக்கள் மூலம் இக்காலப் பெண்ணிய கலைஞர்களைப் போலவே பெண்ணின் உடலுக்கு சரியான மரியாதையை ஏற்படுத்த முயல்கிறார். பல காலமாகப் பெண்ணின் உடல் என்பதற்கு ஏற்பட்ட அவமரியாதை, இழிவு இவைகளினின்று மீட்டுத் திரும்ப அதற்குரிய பெருமையை ஒப்படைப்பதற்கான தளமாக தன் சிற்பங்களை இவர் வடிக்கிறார் (Kanaiyazhi Kuzhu, 2003).

பெண் ஓவியர்கள் தங்களின் படைப்புகள் வழி சமுதாயத்தில் பெண் எவ்விதம் பார்க்கப்படுகிறார் என்பதையும், பெரும்பாலான பெண் கலைஞர்கள் தங்களுடைய பெண்மை, பால் வேறுபாடு தொடர்பான வெளிப்பாடுகள் போன்றவற்றைப் பற்றி நேரடியாகச் சொல்லாமல் தங்கள் ஓவியப் படைப்புகளில் வழி வெளிப்படுத்தியுள்ளனர்.

## சமூக நிலையில் பெண்கள்

"பெண்களைப் பற்றிய சமூக எதிர்பார்ப்பு ஒரு குறிப்பிட்ட அடிப்படையிலேயே அமைந்துவிட்டது. இனப் பெருக்கத்திற்கும், இல்லக் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கும் உரியவர்கள் பெண்கள் என்பதற்கு அப்பாற்பட்டு அவர்களின் உண்மை வாழ்வு எண்ணப்படுவதில்லை" (Saroja, 2000).

பெண்குழந்தைகள் வளர்க்கப்படும் போது சிறு வயது முதலே பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்கு செல்ல தயார்ப்படுத்தும் பணியே பெரும்பாலும் இல்லங்களில் காணப்படுகிறது. இந்த நிலை இந்த நூற்றாண்டில் மாறி இருந்தாலும் பெரும்பான்மை மாற்றம் கண்டது என்று நம்மால் அறுதியிட்டுக் கூற முடியாது.

பித்யுத் பிரபா அவர்களின் 'எதிர்வினை' என்னும் கவிதையில்

"நான் என்ன சாசனமா

எழுதிக் கொடுத்திருக்கிறேன்

என் வாழ்க்கை முழுதும்

உழன்றே கழிய வேண்டுமென்று?

வேலை, வேலை, வேலை

வேறில்லை இராப்பகலாய்

வேறெதுவுமே கிடையாதோ

வாழ்க்கையில்?

குடும்பங்களிலும், பணி நிலையிலும் பெண்கள் இரட்டை குதிரை சவாரி செய்யும் நிலையையே இக்கவிதை நமக்கு சுட்டிக் காட்டுகிறது (Kanaiyazhi Kuzhu, 2003).

## பெண் கல்வி

19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் பெண்ணிய இயக்கம் மேலைநாடுகளில் வளர்ச்சியுற்ற போது, பெண்ணுரிமை மற்றும் பெண்களின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது இதனால் பெண்கல்வி உலகெங்கும் வளர்ச்சி பெறத்தொடங்கியது பெண் கல்வி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பெண்கள் இன்று பல்வேறு நிலைகளில் முன்னேற்றம் பெறத் தொடங்கியுள்ளனர். இந்நிலைக்கு மேலை நாடுகளில் தோன்றிய பெண்ணிய இயக்கமே காரணமாக இருந்தது. இந்தியாவில் பெண்கள் அனைவரும் கல்வி கற்பதற்கு வழிவகை செய்யும் மசோதாக்கள் பல இயற்றப்பட்டு பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. ஆரம்ப காலகட்டத்தில் பெண் கல்வி குறித்து அறியாமையிலிருந்த பலர் பின்னர் பெண்களின் கல்வியின் அவசியத்தை உணர்ந்து பள்ளிக்கு அனுப்ப தொடங்கினர்.

பெண்களின் கல்வி அறிவானது அவர்களைச் சார்ந்தது மட்டுமே என்ற நிலையில் கருதப்படாமல் சமூகம் சார்ந்த நிலையில் பெரும் வளர்ச்சி நிலையை அடைய காரணமாக இருந்தது எனலாம். பெண் கல்வி குறித்த விழிப்புணர்வு உலகெங்கும் பரவத் தொடங்கியபோது இந்தியாவில் அதன் தாக்கம் குறைவாகவே காணப்பட்டாலும் காலமாற்றத்தில் பெண்களைப் பணிக்கு செல்லவும், அறிவு பெறவும் முன்னேற்றம் அடையவும் கல்வி முக்கியமானதாகக் கருதப்பட்டது.

கல்வி அறிவு பெற்ற பெண்கள் அனைத்துத் துறைகளிலும் தடம் பதிக்கத் தொடங்கினார். சமூகப் பொறுப்புகளை உணர்ந்து செயலாற்ற தொடங்கினர். உலகெங்கிலும் கல்வி அறிவு பெற்ற பெண்களைத் தேடி உயர்பதவிகளும் அவர்களை நாடி வந்தன. இன்று உலகெங்கிலும் கல்வியால் பெற்ற பயனின் காரணமாகப் பெண்கள் பல சாதனைகள் புரிந்து வருவதைக் காணலாம்.

பெண்கள் பணியாற்றாத துறைகளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு பெண்கள் மன உறுதியுடன் திண்மையுடன் நேர்கொண்ட பார்வையுடனும் தங்களுடைய தனி திறமையாலும் சிறந்த கல்வி அறிவு பெற்றுப் சமுதாயத்தில் பல சாதனைகள் புரிவதை நாம் காணலாம்.

## பெண்ணின் மொழி

சமூகத்தில் காலம் காலமாகப் பெண்கள் தங்களுடையக் கருத்துக்களையும், எண்ணங்களையும் படைப்புகளில்வெளிப்படுத்துதல் குறைவாகவே காணப்பட்டது. பல சமூக மாற்றம் முன்னேற்றம் காரணமாகவும் பெண்களின் மொழியை ஆண்கள் தங்களின் படைப்புகளின் வழி வெளிப்படுத்த முயற்சி செய்துள்ளனர். ஆனால் இவை முழுமையாகப் பெண்களே தங்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாகக் கூறியவை என நாம் அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. பெண்ணின் சிந்தனை வழி வெளிப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து ஆண் கவிஞர்கள் தங்கள் படைப்புகள் வழி வெளிப்படுத்தியுள்ளனர்.

இக்கருத்தை கணையாழி இதழில் வெளிவந்த இரா. மீனாட்சிஅவர்களின் நேர்காணல் நமக்கு விளக்கக் காணலாம். "உங்களுடன் சேர்ந்து நான் சிந்தித்துப் பார்க்கிறேன். ஆமாம். பெண்மொழி என்று ஒன்று இருக்கிறது. மழலை மொழி என்று ஒன்று இருப்பதைப் போல பெரியவர்களின் மொழி என்றும் ஒன்று இருக்கிறது அல்லவா? அவர்கள் ஒரு சொல் சொன்னாலே போதும். ஆயிரம் அனுபவங்களில் தோய்ந்த ஒரே சொல்லாக இருக்கும். அதைப்போல பெண்ணுக்கென்று கண்டிப்பாக ஒரு மொழி இருக்கிறது. அவளுடைய இரசாயனம் வேறு. ஆணின் இரசாயனம் வேறு. மனித உடலின் இடப்பக்க இரசாயனம் வேறு: வலப்பக்கம் இரசாயனம் வேறு.; பெண்ணின் உடல் மாறுதல்கள், நிலவுமொழி என்று கூட கூறப்படுகிறது. ஆணுக்கு சூரிய மொழி, பெண்ணின் விசனங்களை, (வருத்தங்களை)இரசாயன மாற்றங்களை அழகு உணர்வுகளை ஓர் ஆணால் அப்படியே எழுத முடியாது. பெண்ணிடம் கேட்டு அறிந்து சில ஆண்கள் கூறுகின்றனர். அது ஓரளவுக்குத்தான் சரியாக இருக்கலாம். பெண்மொழி முழுக்கவும் தாயன்பு, சக்திநிலை தொடர்புடையது. வீரியமாக நளினமாக நாணம் கலந்து அத்தனை வலிகளுடன் அவள் சொல்வதைப் போல ஒரு ஆணால் சொல்ல முடியாது. ஆனால் பெண்ணின் உயர்வுக்காக பாரதி போல ஒரு தோழமை உணர்வோடு, சக மனிதனாகப் பேசலாம். அப்படிப் பல ஆண்கள் பெண்களுக்காக எழுதி இருப்பதை மரியாதையுடன் ஏற்கிறேன். அதேபோல் ஒரு ஆணுக்குள் பெண்மையும் பெண்ணுக்குள் ஆண்மையும் விழித்து எழும் நேரங்களும் உண்டு." (Kanaiyazhi Kuzhu, 2003) என்று பெண் மொழியை விளக்கியுள்ளார்.

இரா. மீனாட்சி அவர்கள் பெண் தனது உடல், அனுபவம், தேவைகளுக்கான மொழியைத்தேடிக் கொண்டிருக்கிறாள். இதை ஈழத்துப் பெண் கவிஞரான ஆழியாள்

"அங்கு எனக்கென

ஓர் பிரபஞ்சம் உருவாகும்

அப்போது உயிர்பெறும்

எனக்கான வரிவடிவங்களுடன் கூடிய

என் மொழி

அதன்பின்

தேமல் படர்ந்த எவனாயினும்

என்னோடுஉரையாடட்டும்

அப்பொழுது கூறுகிறேன்

பதிலை,

என் மொழியில்;

என் ஆதித்தாயின்

பெண் மொழியில்

அதுவரை நீ காத்திரு”

என பாடியிருக்கிறார் (Padmavathi, 1985).

பொதுவாக தந்தைவழிச் சமூகத்தில் உருவாக்கப்பட்ட சொற்களுள் பேசிக்கொண்டிருக்கும் நிலைமாறி பெண்மொழி உருவாக்கப்பட வேண்டும் என்ற பெண் சிந்தனையாளர்களின் கருத்தையே ஆழியாளின் இந்தக்கவிதை புலப்படுத்தி நிற்கிறது.

மொழியில் பெண்களுக்கு தனிச்சொல் இல்லாத நிலையையும், ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கூட அப்பாவின் மக்களாகவே அழைக்கப்பட்டனர். பெண்கள் என்றால் திருமணத்திற்கு முன் அப்பாவின் மகள், திருமணத்திற்குபின் கணவனின் மனைவி. பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்கும் போது அப்பாவின் பெயர் முன் எழுத்தாக அமைவதும் சட்டங்கள் மூலம் அம்மாவின் பெயர் பிள்ளையின் பெயர் முன் விருப்பப்பட்டால் சேர்த்துக் கொள்ளும் நிலை உள்ளது. திருமணத்திற்குப் பின் திருமதி ஆவதும்,

பெயருக்குப் பின் கணவனைச் சுமப்பது பெண்களின் பொறுமைக்கு அணிகலனாக விளங்குவதை கணையாழி இதழில் தலையங்கம் சுட்டிக்காட்டுகிறது.

பெண்களுக்கு என்று தனி சொல் வந்ததும், பொது சொல்லைக் கண்டுபிடித்து பெண்களுக்கான தனி சொல்லை அழிக்கும் தந்திர வேலையை

"Chairman பெண்ணாகும் போது chairwoman ஆனது.

Chairwoman என்பதை ஏற்க முடியாமல்

Chairperson என்ற பொதுச்சொல் வந்தது.

Mayor ஆணாக இருக்கும் பொழுது

மாநகரத் தந்தை என்றார்கள்

பெண் மேயர் வரும்பொழுது

மேயரே இருக்கட்டும் என்றார்கள்."

பெண்பாலுக்கு தனிச்சொல் உருவாவதைத் தடுக்கும் முயற்சிகளையும், கைம்பெண் விதவை சொற்களுக்கு ஆண்பால் சொற்கள் இல்லை என்பதும் எந்தெந்த சொற்களுக்கு ஆண்பால் சொல் இல்லை என்பதும், எந்தெந்த சொற்களுக்குப் பெண்பால் சொல் இல்லை என்பதும் கணையாழியின் தலையங்கத்தில் உள் நோக்கி ஆராயப்பட்டுள்ளது (Kanaiyazhi Kuzhu, 2003).

ஆணாதிக்க ஆக்கிரமிப்பிலிருந்து மொழியை விடுவித்து இருபாலருக்குமான சொற்களை இனிமேலாவது தமிழில் படைக்கவேண்டும் என்னும் நோக்கத்தை தலையங்கம் வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள் பெரும்பாலும் ஆண்களின் மொழியைத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலை மாற வேண்டும் என்பதை கணையாழி வலியுறுத்தக் காணலாம்.

## பெண் எழுத்தாளர்கள்

கணையாழி இதழில் பெண் எழுத்தாளர்களின் வாழ்க்கை வரலாறு, படைப்புகள், கட்டுரைகள், விமர்சனங்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன. பெண் படைப்பிலக்கியம் குறித்து விவாதங்கள் எழுந்துள்ளன. படைப்பிலக்கிய பணியில் ஈடுபடும் பெண் எழுத்தாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்துப் பேசப்பட்டுள்ளன.

சாகித்ய அகாதமியின் அனைத்து இந்திய பெண் எழுத்தாளர் மாநாடு ஐதராபாத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் தங்கள் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளவும் தாங்கள் வாழும் காலத்தின் இலக்கியம் மற்றும் வாழ்க்கை ஆகியவை சார்ந்த முக்கிய பிரச்சனைகளை விவாதிக்கும் விதமாகவும் சாகித்ய அகாதமி அமைத்துக் கொடுத்த தளமாக இம்மாநாடு கருதப்பட்டது.

"காலங்கள் தோறும் பெண் எழுத்தாளர்கள் என்பதைப் பற்றிப் பேசும்போது பல காலகட்டங்களில் பெண் எழுத்தாளர்கள் இன்மையைப் பற்றியே பேச வேண்டியதாக இருக்கிறது. 'பெண்' என்று சொல்லும்பொழுது நமது மனக்கண்ணில் தோன்றும் பிம்பம் காலங்கள்தோறும் மாறுபடுகிறது. வேறுபடுகிறது. இன்றைக்கும் இந்தியப் பெண் என்ற சொல் எல்லோர் மனதிலும் வெவ்வேறு மனச் சித்திரங்களையே தோற்றுவிக்கிறது. இன்றுவரை இந்தியப் பெண் காலனீய அடையாளங்களுடனேயே வாழ்பவர்களாக இருக்கிறாள்" (Kanaiyazhi Kuzhu, 2003).

பெண் எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிட புகழ் பெற்ற நூல் வெளியீட்டு நிறுவனங்கள் தயங்கிய காலம் ஒன்று இருந்தது. இன்று அந்நிலை மாறியுள்ளது. பெண்களின் இலக்கியப் படைப்புகள் பல வெற்றியை நிலைநாட்டி உள்ளன. இந்த வெற்றியைப் பக்குவமாகக் கையாள வேண்டியுள்ளது.

"சுந்தரமூர்த்தி" பெண்கள் தங்கள் உடல் உறுப்புகளைக் குறித்துத் தங்கள் படைப்புகளில் பேசும்போது அது பெண் குலத்துக்கு வலிமை சேர்ப்பதாகவும், விடுதலை தருவதாகவும், கட்டுடைத்துத் தளையறுப்பதாகவும் ஆணாதிக்க மதிப்பீடுகளை நொறுக்குவதாகவும் இருக்க வேண்டும். அது நேசத்துடனும் மரியாதையுடனும் கையாளப்பட வேண்டும். பெருமை தோன்ற எழுதப்பட வேண்டும்" (Kanaiyazhi Kuzhu, 2003). என பெண்ணின் படைப்புகளும், பெருமைப்பட பேசவேண்டும் என்பதை கணையாழியில் இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் வகையில் சுயசரிதைச் சாரலில் மண்வாசனை என்னும் பகுதியில் மாலிகா அமர்ஷேக் என்பவர் பெண்ணியம் குறித்த தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

"வெற்றியடைந்த ஒவ்வொரு ஆணுக்குப் பின்னே ஒரு பெண் இருக்கிறாள்"என்ற சொல் வழக்கை நான் அழித்துவிட விரும்புகிறேன். ஆணும், பெண்ணும் இயற்கையின் இரு படைப்புகள். இரு பரிமாணங்கள் இரண்டுமே முழுமையானவை அல்ல. ஒத்தத்திறன் படைத்தவை." எனும் கருத்தை முன்வைத்துள்ளார் (Kanaiyazhi Kuzhu, 2003).

இவர்களின் கருத்தை உற்று நோக்கும் போது பெண் படைப்பாளர்களின் படைப்புகள் பெண்மைக்குப் பெருமை சேர்ப்பதோடு மட்டுமல்லாது, சிறந்த அணிகலனாகப் பெண்ணின் உறுதியான நிலைப்பாட்டைச் சமுதாயத்துக்கு உணர்த்துவதாகவும் அமைய வேண்டும் எனும் கருத்தை பெறலாம்.

## முடிவுரை

கணையாழி இதழ்களின் வழி பெண்ணிய ஆக்கங்கள் எனும் தலைப்பின் கீழ் பெண்ணியம் என்ற சொல்லின் விளக்கம், மேலை நாடுகளில் பெண்ணியம் தோன்றி வளர்ந்த விதம், மற்றும் பெண்ணுரிமை குறித்தும் சமூக நிலையில் காணப்படும் பெண்களின் நிலை கற்புக் கோட்பாடு குறித்தும் கணையாழி படைப்புகளில் வழி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. சமூகநிலையில் பெண்கள் நாள்தோறும் சந்திக்கும் சிக்கல்களையும் கணையாழி இதழின் படைப்பாக்கத்தில் அவை வெளிப்படுத்தப்பட்ட விதம் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. கணையாழி இதழில் இடம் பெற்றுள்ள பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் விமர்சனங்கள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளன பெண்ணிய ஓவியர்களின் ஓவியங்கள் வழி வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகளும், பெண் மொழி குறித்தும், தமிழில் பெண்களுக்கென தனி சொல்லை உருவாக்க வேண்டும் என்பது குறித்தும் இக்கட்டுரை வழி ஆராயப்பட்டுள்ளது.

## References

Kanaiyazhi Kuzhu, (2003) Kanaiyazhi, Kanaiyazhi Publication, Chennai, India.

Muthuchithambaram, S., (1995) Penniyam Thotramum Valarchiyum, Paari Nilayam, Chennai, India.

Padmavathi, V., (1985) Pen kavithai mozhiyum pen kavinarkalum, Vallisundar Pathippagam, Chennai, India.

Prema, R., (1998) Penniyam, Tamil Puthagaalaiyam, Chennai, India.

Saroja, K., (2000) Penniya Padaipalarkalin Puthinangalil Penniya Paarvai, Dhanalakshmi Pathippagam, Chennai, India.

Sundaramoorthy, E., (2004) Ilakkiya Ethalkal, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License